# அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு நெதர்லந்து கடன் உதவியின் கீழ் வழங்கப்பட்டிருந்த சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் மற்றும் கெப் வாகனத்திற்காக கணிக்கப்பட்ட பெறுமானத்தேய்வுகள் தொடர்புடைய மானியக் கணக்குடன் மீளாய்வாண்டு வரை சீராக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் அச்சீராக்கத்தினை மானியக் கணக்குகளில் பதிவு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) சுனாமி சமிக்ஞை கோபுரங்களிற்காக 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரை பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 103,487 ஆல் அதிகரித்துக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

(ii) கெப் வாகனத்திற்காக 2009 மற்றும் 2010 ஆகிய 02 ஆண்டுகளிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 29,151,159 ஆல் குறைத்துக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

மேற்படி நிலமை காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முகாமைத்துவ தொடர்பாடல் செயற்திட்டக் கணக்கு மற்றும் திரண்ட மிகை என்பன ரூபா 29,047,672 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நெதர்லந்து கடன் உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 57.3 மில்லியன் பெறுமதியான சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் 2011 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இப்பெறுமதி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கு மற்றும் கடன் மானியக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணனிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ள பெறுமதிகளிற்கிடையே ரூபா 1,366,423 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலளவு முன்னேற்றச் செயற்திட்டம் (ICET) இன் கீழ் 2008 முதல் 2011 ஆம் ஆண்டு வரை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் உதவி உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,641,746,056 ஆனதுடன் அதன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,675,102,159 ஆகும். இந்த வேறுபாடான ரூபா 33,356,103 இனை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

---

பின்வரும் கணக்கு விடயங்களை அவற்றின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தன.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
| --- | --- | --- |
| | **ரூபா** | |
| முகாமைத்துவ தொடர்பாடல் செயற்திட்டம் | | செயற்திட்ட உடன்படிக்கை, செயற்திட்டப் பெறுமதி |
| i. கடன் முதலீடு | | |
| திறைசேரி | 616,515,611 | |
| வெளிநாட்டு உதவி | 701,378,183 | |
| ii. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை | | நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் ஒவ்வொரு செயற்பாட்டினதும் பெறுமதி |
| திறைசேரி | 44,259,006 | திறைசேரி |
| வெளிநாட்டு உதவி | 279,593,255 | வெளிநாட்டு உதவி |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
| --- | --- |
| (அ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 110 | நிறுவனத்தின் நிகழும் நட்டங்கள், இழப்புக்கள் தொடர்பில் தனியான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் 02 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பில் நட்டங்கள், இழப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 371(2) | கருமம் முடிவுற்ற உடன், பெறப்பட்ட முற்பணங்கள் நிலையத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும் |

நிலையத்தினால் பேணிவரப்பட்ட பதிவேட்டின் படி 22 சந்தர்ப்பங்களில் ரூபா 598,732 தொகையான முற்பணங்கள் 01 மாதம் தொடக்கம் 11 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்ததுடன.

(iii) நி.பி. 371(5)

முற்பணமாக வழங்கப்பட்ட சகல தொகைகளையும் நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் தியதியன்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் நடப்பாண்டின் இறுதியில் அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதி ரூபா 3,063,376 ஆக காணப்பட்டது.

(iv) நி.பி. 395(ஆ) மற்றும் (இ)

ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் தயாரிக்கப்படும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பரிசோதனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ருக்கவில்லை.

(v) நி.பி. 1646

ஒவ்வொரு மாதத்திற்குமான வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் என்பன தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்களில் 03 வாகனங்களிற்குரிய ஓட்டக் குறிப்புக்கள் மாத்திரமே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) நி.பி. 1647(ஆ)

நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் தொடர்பில் அவற்றின் உபகரணங்கள் மீதான முழுமையான மெய்மையாய்வொன்று ஆண்டுதோறும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை

ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு தடவையும் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும் நிலையத்திற்குச் சொந்தமான 29 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வானது மீளாய்வாண்டில் ஒரு முறையேனும் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் நிலையத்தின் செயற்பாட்டிலிருந்தான விளைவுகள் ரூபா 12,999,883 பற்றாக்குறையானதுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 52,450,498 ஆகும். அதன் படி மீளாய்வாண்டில் ரூபா 39,450,615 வளர்ச்சி காட்டப்பட்டது. வருமானம் ரூபா 65 மில்லியானல் அதிகரித்தமையே நிதிவிளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

#### (அ) அனர்த்தங்களைக் குறைத்தல் செயற்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்தங்களை குறைக்கும் நோக்கில் அனர்த்தங்கள் நிகழும் மாவட்டங்களை இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான செலவினங்களைச் செய்வதற்காக மீளாய்வாண்டின் மதிப்பீட்டு ஏற்பாடு பின்வருமாறு ரூபா 190 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 146.4 மில்லியன் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தது. மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 148.3 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் எஞ்சியிருந்த தொகையும் இவ்வாண்டின் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | ஏற்பாடு (ரூபா மில்லியன்) | கிடைத்த தொகை (ரூபா மில்லியன்) | செலவினம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| i. 47 செயற்திட்டங்களிற்காக | 120 | 110 | 111.9 |
| ii. அம்பாறை, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிற்காக | 30 | 30 | 30 |
| iii. தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் | | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) நிலச்சரிவுகளை குறைத்தல் செயற்திட்டத்திற்காக (கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா) | 30 | - | - |
| (ஆ) நிலச்சரிவுகள் தொடர்பான விசேட ஆய்விற்காக | 10 | 6.74 | 6.4 |
| | ----------- | ------------ | ------------ |
| | 190 | 146.74 | 148.3 |
| | ===== | ===== | ===== |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 04 செயற்திட்டங்களிற்காக ரூபா 12,340,985 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிற்காக ரூபா 5,839,000 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச்செயற்திட்டங்கள் ஆண்டில் செயற்படுத்தப்படாமையால் அத்தொகை மீண்டும் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாத்தறை மாவட்டத்தில் பீக்வெல்ல நிலச்சரிவினைக் குறைத்தல் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,350,000 ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,500,000 தொகை ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டத்தினை செயற்படுத்தாது ஏனைய செயற்திட்டமொன்றிற்காக அந்நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்தவதற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95,909,005 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,500,000 மொத்தத் தொகையும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்தினை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அச்செயற்திட்டம் முடிவடைந்ததாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஆபத்தான நிலமைகள் தொடர்பான கட்டமைப்பினை தயாரித்தல் செயற்திட்டம்**

நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, கடலரிப்பு மற்றும் வரட்சி போன்ற அடிப்படை அனர்த்தங்களிற்கான ஆபத்தான நிலமைகள் தொடர்பான கட்டமைப்பினை தயாரிப்பதற்காக பின்வரும் நிறுவனங்களிற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்புகள் நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

| **கருமங்கள்** | **நிறுவனம்** | **நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளின் பெறுமதி** | **முன்னேற்றம்** |
|---|---|---|---|
| | | (ரூபா | |
| i. நிலச்சரிவு அனர்த்தத் தினை வரைபடமாக்கல் | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு | 1,565,275 | காலி மற்றும் நுவரெலியாவில் 23 வரைபடங்கள் முடிவுற்றிருந்தன. |
| ii. வெள்ள அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | நீர்ப்பாசனத் திணைக்களம் | | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| iii. சூறாவளி அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | வளிமண்டலவியல் திணைக்களம் | 481,400 | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| iv. கடலோர அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | கரையோர பாதுகாப்புத் திணைக்களம் | 635,220 | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை |
| v. வரட்சி அனர்த்தத்தினை வரைபடமாக்கல் | விவசாயத் திணைக்களம் | 4,177,854 | ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. |

**இ. முன்னேற்பாடுகளை திட்டமிடல்**

அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனத்தங்களை எதிர்கொள்ளும் திட்டத்தினைத் தயாரிப்பதற்காக அரசாங்க நிறுவனங்களிற்கு உதவும் பொருட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 5 மில்லியன் ஏற்பாட்டினை ஒதுக்கியிருந்தது. முன்னேற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் பயிற்சி செயலமர்வுகளை நடத்துவதற்கும் திறைசேரியிடமிருந்து நிலையத்திற்கு ரூபா 3 மில்லியன் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 3,170,354 தொகை முற்பணமாக செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மீளாய்வாண்டில் அச்சிடப்பட வேண்டிய தேசிய கொள்கை நூல் பிரதிகளின் எண்ணிக்கை திட்டமிடப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 100,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் எவ்வித தேசிய கொள்கை நூல்களும் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

ii. முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட அடிப்படை திட்டமிடல் செயலமர்வுகளை நடத்துவதற்கு ரூபா 100,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் அடிப்படை செயலமர்வு நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 30,350 செலவிடப்பட்டிருந்தது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய 02 மாவட்டங்களில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

iii. மீளாய்வாண்டின் இறுதியளவில் 16 மாவட்டங்களில் முன்னேற்பாட்டு திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் 09 மாவட்டங்களில் இறுதித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.

**ஈ. அவசர செயற்பாட்டு நிலையம்**

---------------------------------------------

இச்செயற்பாட்டு நிலையம் 2006 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்ததுடன் வாரத்தின் 07 நாட்களில் 24 மணித்தியாலங்களும் செயற்பாட்டிலுள்ளது. அவசர செயற்பாட்டு நிலையத்தினால் ஏற்படச் சாத்தியமான இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன்கூட்டியே அபாய அறிவிப்புத் தகவல்களை குறித்த தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து பெற்று அத்தகவல்களை மதிப்பாய்விற்குட்படுத்தி அவற்றை தொடர்புடைய தரப்பினர்களிற்கு வழங்கி அந்த அனர்த்த நிலமைகள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணித்தல் செய்யப்படுகிறது. இந்த அவசர செயற்பாட்டு நிலையத்திற்காக அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலளவு முன்னேற்ற செயற்திட்ட கடன் உதவியின் கீழ் பின்வரும் உபகரணங்கள் கிடைத்திருந்தன.

| | உபகரணங்கள் | பெறுமதி |
|---|---|---|
| | ------------------------------ | -------------------- |
| | | ரூபா |
| i. | சுனாமி சமிக்ஞை கோபுரங்கள் | 263,698,519 |

| | | |
|---|---|---|
| ii. | அவசர சிகிச்சை செயற்பாட்டு அறை | 96,022,782 |
| iii | கணனிச் செயற்பாட்டு அறை | |

அவசர செயற்பாட்டு நிலையத்தின் கீழ் உள்ள அவசர சிகிச்சை அறை (Call Management Centre) இனை தயாரிக்கும் நடவடிக்கைகள் முடிவுற்றிருந்த போதிலும் அதற்காக உத்தியோகத்தர்களை இணைப்புச்செய்தல் கணக்காய்வுத் திகதிவரை இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலுவலகங்களை நடாத்தல்

நாட்டில் இடம்பெறக்கூடிய அவசர அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் 25 மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் பேணப்பட்டிருந்தன.

மாவட்ட நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதாந்த செயலாற்றல்கள் முறைப்படி சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப வளவில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,407,600 தொகை அந்நிறுவனத்தில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 ஜனவரி மாதத்திலிருந்து வேறோர் கட்டிடத்திற்கு நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அந்த வைப்புப் பணத்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 நீர் பவுசர்களை கொள்வனவு செய்தல்

அனர்த்த எதிர்கொள்ளலை கட்டியெழுப்பவதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 28,507,482 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதில்

குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 9,820,000 பெறுமதியான 02 நீர் பவுசர்கள் அந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பதவியணி நிர்வாகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்காக 2011 மே 20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் பதவிகளிற்காக கணக்காய்வுத் திகதி வரை உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்படாமையால் அப்பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் (செயற்பாடுகள்) | 01 |
| பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் இழப்புக்களைக் குறைத்தல்) | 01 |
| பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிதி) | 01 |
| தனிப்பட்ட உதவியாளர் | 01 |
| தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் | 03 |
| வானொலி செய்தி செயற்பாட்டாளர் | 01 |
| புகைப்பட மற்றும் விடியோ படப்பிடிப்பாளர் | 01 |

### 3.4 வாகனப் பயன்பாடு

அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் 27 மாவட்ட அலுவலகங்களின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக 27 டபல்கெப்களும் 02 வேன்களும் அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் எதிர்கொள்ளல் இயலுமையினை அதிகரித்தல் செயற்திட்டத்தின் (ICET) கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மீளாய்வாண்டில் 29 வாகனங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபா 238,528,107 ஆக காணப்பட்டதுடன் நிலையத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அந்த வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இந்த வாகனங்களின் உரித்தினை நிலையத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மேற்படி செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கடன் உதவியாக ரூபா 19.5 மில்லியன் பெறுமதிகொண்ட டொயோட்டா லேண்ட் குரூசர் ஜீப் ஒன்று 2010 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு கிடைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 யூன் 15 ஆந் திகதி வரை நிலையத்தின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நிலையத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் அவ்வாகனம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 3.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான 04 ஆண்டு காலத்தில் இருப்புக்கள் தொலைந்தமைக்கான இழப்பிற்காக ரூபா 206,011 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விழப்பினை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது முறைப்படி கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முன்னேற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல்

(ஆ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்

(இ) வாகனங்களின் பயன்பாடு

(ஈ) அனர்த்தங்களை குறைத்தல் செயற்திட்டம்